ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைச் சபை - 2024
--

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைச் சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களின் குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அறிக்கை முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் எனும் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு நான் பெற்றுக் கொண்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதுமானது என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந் நிதிக் கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சபையின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் அதிகாரசபை தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக் கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வு விடயப்பரப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக் கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் தொழில்சார் தீர்ப்பு மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்விற்கு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்கள்கள் நியாயமாக மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக சபையின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள்

அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வின் விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்,

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க அதிகாரசபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்,

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும்,

1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.5.1 கணக்கீட்டு குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	சபைக்கு சொந்தமானகாணி 10.0229 ஹெக்டேயராகஇருந்த போதிலும், 9.8047 ஹெக்டேயர் காணி மட்டும் ரூபா 4,845,500,000 இற்கு மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் 0.2182 ஆன காணியளவு மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	காணிக்குரிய அளவீட்டு நடவடிக்கைகளுக்கான கோரிக்கை மஹரகம பிரதேச செயலாளருக்கு மற்றும் நில அளவைத் திணைக்களத்திற்கு முன்வைக்கப்பட்டுள்ளது மற்றும் காணியின் முழுமையாக கையேற்றல் பணி நிறைவு செய்யப்பட்ட பின்னர் மீள்மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	முழுக் காணியையும் மீள் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு பொருத்தமற்ற இருப்பினுள் ரூபா 3,392,723 ஆன இருப்பு நிதிக் கூற்றுக்களிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	2025 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	இறுதி தொகையினுள் காணப்படுகின்ற பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு பொருத்தமற்ற

			இருப்பு நிதிக் கூற்றுக்களிலிருந்து அகற்றப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(இ)	சபையின் பதவியணிக்கு,மதகுருமாருக்கு மற்றும் பிற விடுவிப்புக்களுக்கான பட்டியல்களின் கூட்டுத்தொகை சிஸ்டொலிக்(Systolic) அமைப்பின் பிரகாரம் ரூபா 329,951,830 ஆக காணப்பட்ட போதிலும் அது 301,595,862 ஆக கணக்கிடப்பட்டிருந்தமையினால் இலாபம் ரூபா 28,355,968 இனால் அதிகரிக்கப்பட்டிருந்தது.	எதிர்காலத்தில் சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிதிக் கூற்றுக்களில் வழுக்கள் சீர் செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ஈ)	சபையின் உள்நோயாளர்களின் வைப்புத் தொகை செலவு மீதியாக வேண்டிய போதிலும் வருமானக் கட்டுப்பாட்டு கணக்கில் அது ரூபா 28,223,907 வரவு மீதியாக காண்பிக்கப்பட்டு நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறை பொறுப்புக்களிலிருந்து குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டில் அனைத்து சமப்படுத்தல்களும் நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிதிக் கூற்றுக்கள் மற்றும் தொடர்புடை லெஜர் கணக்கினுள் வழுக்கள் சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(உ)	வங்கி கணக்கிணக்க கூற்றில் இனங்காணப்படாத வைப்புக்கள் 7,392,471 இனங்காணப்பட்டு கணக்கிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	தற்போது ரூபா 5,347,692 ஆன தொகை இனங்காணப்பட்டு கணக்கிடப்பட்டுள்ளது மற்றும் எஞ்சியவை மிக விரைவில் சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	இனங்காணப்படாத மொத்த வைப்பு பெறுமதி இனங்காணப்பட்டு கணக்கிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ஊ)	2024 திசெம்பர் மாதத்திற்குரிய சுத்தப்படுத்தல் மற்றும் வைத்தியசாலை பூங்கா சேவைக்காக செலுத்தப்பட வேண்டிய மீதி ரூபா 8,183,726 ஆன போதிலும் நிதிக் கூற்றுக்களில் அது ரூபா 2,242,747 என காணப்பிக்கப்பட்டமையின் காரணத்தினால் ரூபா 5,940,979 இனால் இலாபம் அதிகரிக்கப்பட்டு திரட்டப்பட்ட செலவினம் அப் பெறுமதினால் குறைந்திருந்தது.	செலுத்தப்பட வேண்டிய பெறுமதி சரியாக இனங்காணப்பட்டிராமையினால் கணக்கிடப்பட்டிராததுடன் 2025 நிதிக் கூற்றுக்களினுள் சரியாக இனங்காணப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிதிக் கூற்றுக்களில் இந்த வழுக்கள் சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(எ)	மீளாய்வாண்டில் வேலையை விட்டுச் சென்ற வைத்தியரொருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய பிணை	எதிர்காலத்தில் தவறுகள் சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	-மேற்படி-

	முறை கட்டணம் நிதிக் கூற்றுக்கள் உள்ளடக்கப்படாமையின் காரணத்தினால் ஆண்டின் வருமானம் மற்றும் பெற வேண்டிய பிணைமுறி மீதி ரூபா 660,175 இனால் மற்றும் ஒப்பந்தத்தினை மீறிய இரு உத்தியோகத்தர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட பிணைமுறி கட்டணம், ஆண்டின் வருமானத்திற்கு எடுக்கப்படாது செலவின கணக்குகளில்செலவு வைக்கப்பட்டிருந்தமையினால் ஆண்டின் வருமானம் மற்றும் செலவீனம் ரூபா 2,862,288 இனால் குறைவடைந்திருந்தது.		
(ஏ)	சொத்துக்களாக கணக்கிடப்பட வேண்டிய ரூபா 2,426,677 ஆன நுகர்வுப் பொருட்கள் கொள்வனவாக கணக்கிடப்பட்டமையின் காரணத்தினால் மீளாய்வாண்டின் இலாபம் மற்றும் சொத்துக்கள் அப் பெறுமதியினால் குறைந்திருந்தது.	-மேற்படி-	இனங்காணப்படாத மொத்த வைப்பு பெறுமதி இனங்காணப்பட்டு கணக்கிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ஐ)	ஏனைய செயற்பாடு செலவுகளின் கீழ் வழங்குனர்களுடன் கையொப்பமிடப்பட்டுள்ள சேவை ஒப்பந்தம் மற்றும் ஏனைய செலவினங்களுள் காணப்படுகின்ற 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்குரிய ரூபா 14,880,821 மற்றும் ரூபா 137,914 ஆன செலவீனம் மீளாய்வாண்டில் நிதிக் கூற்றுக்களில் செலவீனமொன்றாக காண்பிக்கப்பட்டமையினால் ஆண்டின் இலாபம் ரூபா 15,018,735 இனால் குறைந்திருந்தது.	2023 ஆம் ஆண்டில் சரியாக கணக்கிடப்பட்டிருக்கவில்லை.	ஆண்டின் இலாபம்/ நட்டம் கணக்கிடும் போது மீளாய்வாண்டிற்குரிய செலவுகள் மட்டும் கவனத்திற்கு எடுக்கப்படல் வேண்டும்.
(ஒ)	கொள்வனவுகளுக்குரிய பொருட்கள் சபைக்கு கிடைக்கப் பெறாதவிடத்து முழு தொகையும் செலுத்தப்பட்டிருந்தமையின் ஊடாக எதிர்காலத்திற்காக மேற்கொள்ளப்பட்ட வரவுகளுக்கு கடன்கொடுநர் மீதி வரவு வைக்கப்பட்டிருந்தது. இந்த காரணத்தினால் நிதிக் கூற்றுக்களில் கடன்பட்டோர் மீதி ரூபா 3,289,557 இனால் குறைந்திருந்தது.	பொருட்கள் பெற்றுக் கொள்ளப்பட்டு பொருட்கள் பெறுவன பத்திரங்கள் (GRN)உள்ளடக்கப்பட்ட பின்னர் குறித்த சீராக்கல் மேற்கொள்வதற்கு முடியாது போகின்றமையினால் மற்றும் முற்பணம் தற்போது செலுத்தப்பட்டுள்ளமையினால் அம் மீதிகள் கடன்பட்டோர் இன் கீழ் உள்ளடக்கப்பட்டது.	நிதிக் கூற்றுக்களில் சரியான தகவல்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
(ஔ)	திரட்டப்பட்ட செலவீனத்தின் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய ரூபா 1,292,674 ஆன தொகை காண்பிக்கப்பட்டிராமையின்	தவறுகள் சீர் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.	நிதிக் கூற்றுக்கில் தவறுகள் சீர் செய்வதற்கு நடவடிக்கை

	காரணத்தினால் பெறுமதிசேர் வரி (VAT)பொறுப்பு அப் பெறுமதியினால் குறைந்திருந்தது.		எடுக்கப்படல் வேண்டும்.
(க)	வேலைத்தள கட்டிடம் நிர்மாணிப்பதற்குரிய முற்பணம் ரூபா 7,106,554 நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதி திகதியில் அதன் மீதி ரூபா 5,955,191 ஆகியமையினால் ரூபா 1,151,363 ஆன தொகை அதிகமாக காண்பிக்கப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டில் சீர்செய்யப்படும்.	-மேற்படி-
(ங)	வழங்குனர்களுடன் கையொப்பம் இடப்பட்டுள்ள சேவை ஒப்பந்த செலவீனம் ரூபா 2,441,897 ஆன போதிலும் அது ரூபா 3,550,488 என காண்பிக்கப்படுகின்றமை சீர் செய்வதற்கு அதன் வேறுபாடான ரூபா 1,108,591 ஆன நிலுவை செலுத்தல்கள் நானாவித கடன்பட்டோராக காண்பிக்கப்பட்டமையின் காரணத்தினால் திரட்டப்பட்ட செலவீனம் மற்றும் நானாவித கடன்பட்டோர் அப் பெறுமானத்தினால் அதிகரித்திருந்தது.	2024 ஆம் ஆண்டிற்காக வருமானம் ஈட்டப்படும் போது முழு தொகையும் திரட்டிய வருமானம்கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டு குறித்த செலவினக் கணக்கு வரவு வைக்கப்பட்டுள்ளதுடன் மொத்த பெறுமதியில் 2025 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 1,209,254 ஆன தொகை உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் அது சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	-மேற்படி-
(ச)	2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளிலிருந்து நிலுவையாகவுள்ள ரூபா 1,816,132 ஆன கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய பணிக்கொடை ஏனைய பொறுப்புக்களின் கீழ் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய சான்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.	நீண்ட காலமாக நிலவி வரும் மீதிகளாவதுடன் 2025 ஆம் ஆண்டில் மீண்டும் ஒரு முறை பரீட்சித்து சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	பொறுப்புக்களின் நிலைப்பாடு உறுதி செய்து கொள்வதற்கு மற்றும் நிதிக் கூற்றுக்களில் சரியாக காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

1.5.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
நிதிக் கூற்றுக்கள் பிரகாரம் கடன்பட்டோர் பேரேட்டின் மீதி ரூபா 993,098,036 ஆன போதிலும், கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட கடன்பட்டோர் அட்டவணையின் பிரகாரம் அம் மீதி ரூபா 1,056,038,283 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் ரூபா 62,940,247 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.	இந்த வேறுபாடுகளுக்கான காரணங்கள் தேடியறியப்பட்டு சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சரியான பெறுமதிகள் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

1.6.1 பெற வேண்டிய தொகை

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2024 ஆம் ஆண்டிற்கு முன்னர் சேவையை விட்டுச் சென்ற 23 செவிலியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 37,617,947 பெறுமதியுடைய பிணைமுறி 01 தொடக்கம் 06 ஆண்டுகள் காலம் கடந்திருந்த போதிலும் தற்போது வரையிலும் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	09 செவிலியர்களிடமிருந்து ரூபா 10,809,686 ஆன கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதுடன் எஞ்சிய தொகை அறவிடப்படுவதற்கு சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுப்பதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	விரைவாக அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ஆ)	சேவை இடைநிறுத்தப்பட்ட, சேவையை விட்டுச் சென்ற, வெளிநாடு சென்றுள்ள மற்றும் மரணித்த ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கூட்டுத்தொகை ரூபா 6,077,633 ஆன இடர் கடன் மீதி இதுவரையிலும் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் இத் தொகையில் ரூபா 4,776,425 ஆன தொகையானது 02 ஆண்டுகள் தொடக்கம் 11 ஆண்டுகள் வரையான காலம் தொடக்கம் அறவிடப்பட வேண்டிய மீதியாக காணப்பட்டது.	20 ஊழியர்களிடமிருந்து கடன் தொகை அறவிடப்பட்டு வருகின்றதுடன், எஞ்சிய 11 நபர்களுக்காக கடன் தொகை கொடுப்பனவு செய்யுமாறு தெரிவிக்கப்பட்டு தொடர்ந்தும் கடன் தொகை செலுத்த தவறப்படுமெனில் சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.	-மேற்படி-
(இ)	2023 ஆம் ஆண்டின் சில்லறைக்காசு கட்டுநிதி பூஜ்ஜியமாக்கப்படுவதற்கு பயன்படுத்தப்பட்ட நாளேட்டு குறிப்பினால் உருவாகிய ரூபா 100,100 ஆன நானாவித கடன் கொடுநர் மீதி மீளாய்வாண்டு இறுதி வரையிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.	மீண்டும் ஒரு தடவை கணக்குகள் பரீட்சிக்கப்பட்டு 2025 ஆம் ஆண்டில் சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	மீதி சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை.

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு	இணக்கமின்மைகள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2017 இன் 04 ஆம் இலக்க இலங்கை பொறியியலாளர்களின் சபை சட்டத்தின் 14 ஆம் பிரிவு	இலங்கையின் பொறியியல் பணிகள் மேற்கொள்வதற்காக இலங்கை பொறியியராளர்களின் பதிவு பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு பதிவு பெற்றுக் கொள்ளப்படாத சபையின் உயிரியல் மருத்துவ பொறியியராளராக	உயிரியல் மருத்துவ பொறியியலாளருக்கு இலங்கை பொறியியலாளர்கள் சங்கத்தின் பதிவு சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.	தகைமைகள் தொடர்பில் உறுதி செய்யப்பட்ட பின்னர் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளல் வேண்டும்.

		இணைக்கப்பட்டு SL 1 சம்பள நிலையில் iii தரத்திற்குரிய சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது.		
(ஆ)	2009 மே 14 திகதிய அமப/09/0675/311/028 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானம்.	சுகாதார பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து அமைச்சின் கீழ் இயங்கி வரும் வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களில் நோயாளர்கள் மற்றும் ஊழியர்களுக்காக மீன்கள் மற்றும் கருவாடு வழங்கும் ஒப்பந்தம் இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்திற்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த போதிலும், அதற்கு முரணாக பெறுகை குழுவினால் இதற்காக கேள்வி கோரப்பட்டு தனிப்பட்ட வழங்குனரொருவருக்கு 2023/2024 ஆண்டு மற்றும் 2024 இல் 03 மாதங்களுக்காக முறையே ரூபா 45,009,480 இற்கு மற்றும் ரூபா 6,630,930 இற்கு ஒப்பந்தம் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது.	இதற்கு முன்னர் சில சந்தர்ப்பங்களின் போது அந்த விஞ்ஞாபனத்தினை அடிப்படையாகக் கொண்டு கடற்றொழில் கூட்டுத்தாபனத்திற்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்ததுடன் வழங்கும் போது நேர்ந்த சிக்கலான நிலைமையினால் போட்டி விலைமனு அழைத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது மற்றும் 2025 ஆம் ஆண்டு தொடக்கம் செயற்படுத்தப்படுகின்ற புதிய பெறுகை வழிக்காட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.	அமைச்சரவை தீமானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(இ)	இலங்கை சனநாய சோசலிச குடியரசின் தாபன விதிக்கோவையின் 371(2) மற்றும் அரச கணக்குகள் சுற்றறிக்கை 01/2020	பதவி நிலை இல்லத 8 உத்தியோகத்தர்களுக்காக 58 சந்தர்ப்பங்களின் போது ரூபா 25,000 இனை மிகைத்து ரூபா 2,628,090 சில்லறை காசு உப கட்டுநிதியாக பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டில் நிதிப் பிரமாணம் 371 பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு ஆலோசனை ெற்றுக் கொக்கப்பட்டுள்ளது.	நிதி பிரமகணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும்.
(ஈ)	2015 மே 28 திகதிய 01-21/2015 ஆம் இலக்க சுகாதார அமைச்சின் பொது சுற்றறிக்கை	அமைச்சிற்கு சொந்தமான வைத்தியசாலைகள் மற்றும் ஏனைய வைத்திய நிறுவனங்களில் நோயாளிகளுக்கு மற்றும் இளநிலை ஊழியர்களுக்கு மட்டும் வைத்தியசாலையினால் உணவு வழங்கப்பட்ட போதிலும் அதற்கு முரணாக பணிப்பாளர் சபை தீர்மாணம் 242:15 இன் ஊடாக வைத்தியசாலையின் இளநிலை ஊழியர்கள் அற்ற மற்ற சேவைப் பிரிவுகளை சார்ந்த உத்தியோகத்தர்களுக்கும் ஒரு வேளைக்கு(மதிய உணவு)ரூபா 60 ஆன தொகை அறவிடப்பட்டு உணவு வழங்கப்பட்டிருந்தது.	வைத்தியசாலையின் முகாமைத்துவ சபையானது வைத்தியசாலையின் பதவியணியின் கோரிக்கைகளை கருத்திற் கொண்டு இந்த பகல் உணவினை பெற்றுக் கொடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.	குறித்த சுற்றறிக்கைகளுக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 552.43 மில்லியனான இலாபமொன்றாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான இலாபம் ரூபா 303.77 மில்லியனாக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 248.66 மில்லியனான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டில் அரசாங்க மானியம் ரூபா 150.81 மில்லியன் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 11 இற்கு அமைவாக வருமானமாக கருத்திற் கொண்டமை இந்த அதிகரிப்பிற்கு பிரதான காரணமாக இருந்தது

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	பெறுகை குழுவின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படுவதற்கு முன்னர் கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டு ரூபா 651,960 பெறுமதியான 04 வர்ண தொலைக்காட்சிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் இரண்டு இது வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாது களஞ்சியசாலையில் வைக்கப்பட்டிருந்தது.	தொலைக்காட்சிகள் பொருத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற இரு அறைகளும் பழுதுபார்க்கப்பட்ட பின்னர் பொருத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.	சரியான பெறுகை முறைமையின் பிரகாரம் கொள்வனவுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
(ஆ)	விடயம் தொடர்பான அறிவுடைய உத்தியோகத்தரொருவர் தொழிநுட்ப மீளாய்வு குழுவிற்கு நியமிக்கப்படாது ரூபா 16,225,000 பெறுமதியான 50 மாற்றியமைக்கக்கூடிய நோயாளர் கட்டில்கள் மற்றும் மெத்தைதகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், 40 கட்டில்கள் மட்டும் வழங்குனரினால் வழங்கப்பட்டிருந்தது. வழங்கப்பட்டிருந்த கட்டில்கள் வெவ்வேறு குறைப்பாடுகளின் காரணத்தினால் பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு முடியாது போயிருந்தது.	குறைப்பாடுகள் வழங்குனருக்கு தெரிவிக்கப்பட்டு சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது மற்றும், குறித்த கட்டில்களுக்கான மேலதிக உத்தரவு காலம் பெறப்பட்டுள்ளன, தேவையான உதிரி பாகங்கள் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்ட்டுள்ளது மற்றும் அதன் பிரகாரம் வைத்தியசாலைகள் நிதி ரீதியான நட்டமொன்று ஏற்படாதிருக்க உறுதி செய்யப்பட்டுள்ளது.	சரியான பெறுகை முறைமை பயன்படுத்தப்பட்டு தரமான பொருட்கள் கொள்வனவு செய்தல் வேண்டும்.
(இ)	2023 ஆம் ஆண்டில் Ceftriaxone 1g injection பெயரிலான 35,700 அலகுகள் ரூபா 400 வீதம் ரூபா 13,080,000 இற்கு கொள்வனவு செய்வதற்கு கொள்வனவு கட்டளை மற்றும் ஏற்பு கடிதங்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த போதிலும், 2023, 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டுகளில் முறையே 3,000,13,000, மற்றும் 14,000 அலகுகள் பெறப்பட்டிருந்ததுடன் பெறுமதி ரூபா 2,280,000 ஆன 5,700	வழங்குனரிடம் குறித்த மருந்துகள் இருப்பு இல்லாமையினால் குறித்த காலப்பகுதியினுள் வழங்குவதற்கு வழங்குனர் தவறியுள்ளார், பின்னர் கால ரீதியாக அவ் இருப்பு வழங்கப்பட்ட போதிலும் அதன் போதுCeftriaxone	வருடாந்த மருந்து தேவைப்பாடு சரியாக முன்கணிக்கப்படல் வேண்டும்.

அலகுகள் இந்த அறிக்கையின் திகதி வரையிலும் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. வருடாந்த மருந்துகள் தேவை முறையாக முன்கணிக்கப்படாமையின் காரணத்தினால் சீண்ட காலமாக ஒரே கட்டளை செயற்படுத்தப்படுத்தப்பட்டமையினால் போட்டிதன்மை வாய்நத குறைந்த விலையில் கொள்வனவு செய்யும் வாய்ப்புக்கள் இழக்கப்பட்டன.	ஊசிகளுக்கு ஒவ்வாமை எதிர்வினைகள் இருப்பதாக பரவலாக அறிக்கையிடப்பட்டமையினால் பயன்பாடு வேககமாக குறைந்தது, அக் காரணத்தினால் 3000 குப்பிகள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்பட்டன. மற்றும் அன்று முதல் இன்று வரை வைத்தியசாலையின் தேவைகளுக்கு ஏற்ப குறித்த வழங்குனர்களிடமிருந்து அவை பெற்றுக் கொள்ளப்பட்டது மற்றும் கடந்த இரு ஆண்டுகளில் வைத்தியசாலைக்கு நியமிக்கப்பட்ட தலைவர்களின் தீர்மானம் அரச ஔடத களஞ்சியத்தில் இல்லாத ஔடதங்கள் மட்டும் கொள்வனவு செய்யப்பட வேண்டும் என்பதாகும்.	

3.2 செயற்பாட்டு செயற்திறனின்மை

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2016 ஆம் ஆண்டு தொடக்கம் குறித்த அடிப்படையொன்றில் மற்றும் பணிப்பாளர் சபை அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாது சில நோயாளிகளின் வைத்தியசாலை பட்டியல்கள் விடுவிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அவ்வாறு விடுவிக்கப்பட்டிருந்த பட்டியல்களின் கூட்டு பெறுமதி ரூபா 29,009,042 தொகையாக காணப்பட்டது. 2017 ஆம் ஆண்டினுள் பற்று குறிப்பு ஊடாக கூட்டுத்தொகை ரூபா 6,401,023 ஆன தொகை அகற்றப்பட்டிருந்த போதிலும் அதற்கான காரணம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	விசாரணை நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.	கட்டணங்கள் விடுவிப்பதற்குதொடர்புடைய பணிப்பாளர் சபை அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும்.
(ஆ)	2016 தொடக்கம் 2024 ஆம் ஆண்டுகள் வரை பட்டியல்கள் தீர்க்கப்படாது வைத்தியசாலையிலிருந்து வெளியேறிய நோயாளிகளிடமிருந்து ரூபா 24,306,197 ஆன தொகை இது வரையில் அறவிடப்பட்டிருக்கவில்லை.	மீதியினுள் அதிக பெறுமதியினை காண்பிப்பது கொவிட் 19 காலப்பகுதியினுள் வைத்தியசாலைக்கு அனுமதிக்கப்பட்ட நோயாளிகளிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மீதிகள் ஆகும் மற்றும் அது தொடர்பில் எதிர்காலத்தில்	அறவிடப்பட வேண்டிய வைத்தியசாலை கட்டணங்கள் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

		பணிப்பாளர் சபையின் தீர்மானம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	
(இ)	வெளியேறிய நோயாளிகளின் பட்டியல்களுககாக 10 காப்புறுதி நிறுவனங்கள் மற்றும் சேவை நிறுவனங்களில் மீள்நிரப்பு செய்யப்படாத ரூபா ஒரு மில்லியனை மிகைத்த 90 நாட்களுக்கு அதிகமான காலம் அறவிடப்பட வேண்டிய ரூபா 43,453,787 ஆன கடன்பட்டோர் மீதியொன்று காணப்பட்டது.	மீதிகள் அறவிடப்பட்டு வருகின்றதுடன் தற்போது ரூபா 18 மில்லியனிற்கு குறைக்கப்பட்டுள்ளது.	பணம் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ஈ)	சபையில் நடத்தப்படுகின்ற ஆய்வுக்கூட பரீட்சிப்பு விலைகளின் கிரய பிரதி நலன்கள் பகுப்பாயவொன்று மேற்கொள்ளப்படாது திருத்தப்பட்டிருந்ததுடன் மேற்கொள்ளப்பட்ட தெரிவு பரிசோதனையின் போது வைத்தியசாலையினால் இழக்கப்பட்டிருந்த வருமானம் ரூபா 9,563,000 ஆக காணப்பட்டது.	2024 செப்தெம்பர் மாதத்தில் ஆய்வுக் கூட பரீட்சிப்பு கட்டணம் திருத்தப்படல் வெளிப்படைத்தன்மை இன்றி மேற்கொள்ளப்பட்டுள்ளது மற்றும் தற்போது மீண்டும் ஒரு முறை இது சீர் செய்யப்பட்டுள்ளது.	விகைள் திருத்தம் செய்யப்படும் போது வைத்தியசாலைக்கு நட்டமொன்று ஏற்படாத வண்ணம் மேற்கொள்ளல் வேண்டும்.
(உ)	சபையின் சாதாரண மற்றும் கட்டணம் செலுத்தப்படுகின்ற வார்டுகளில் அனுமதிக்கப்படுகின்ற நோயாளிகளுக்கு தேவையான அவசரமான ஔடதங்கள் உள்நாட்டில் கொள்வனவு செய்யும் போது மற்றும் பட்டியல்கள் தயாரிக்கும் போது முறையே 10 மற்றும் 30 சதவீதமென இலாப வரம்பொன்று பேணிச் செல்லப்பட வேண்டிய போதிலும் தெரிவுக் கணக்காய்வின் போது சாதாரண வார்டுகளில் ரூபா 5,976,775 பெறுமதியிலான 18 பட்டியல்கள் 49 சதவீதமும் 767 சதவீதமும் இடையேயான இலாப வரம்பினையும், கட்டணம் செலுத்தப்படுகின்ற வார்டுகளில் ரூபா 35,983,650 பெறுமதியுடைய 21 பட்டியல்கள் 30 சதவீதமும் 422 சதவீதமும் இடையேயான இலாப வரம்பினை பேணிச் செல்லப்பட்டிருந்தது.	சுட்டிக்காட்டப்பட்டுள்ள பட்டியல்கள் தொடர்பாக மீண்டும் பரீட்சித்து பார்த்து பதிலொன்று பெற்றுக் கொடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.	பட்டியல்கள் தயாரிக்கும் போது முறையான முறைமையொன்று பேணிச் செய்யப்படல் வேண்டும்.
(ஊ)	மின்சாரம் மற்றும் கட்டிட பொருட்கள் களஞ்சியத்தில் 9 ஆண்டுகளுக்கு முன்னர் தொடக்கம் காணப்படுகின்ற பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத கட்டிடப் பொருட்கள் (Building Items) மற்றும் மின்சாதனப் பொருட்களின் (Electrical Items)பெறுமதிகள் முறையே ரூபா 1,612,549 மற்றும் ரூபா 3,984,022 ஆகும். மேலும், இந்த களஞ்சியத்திற்கு சொந்தமான கன்டேனர் பெட்டியொன்றினுள் பல்வேறு வகையிலான இரும்புகள் 2022 ஆம் ஆண்டிலிருந்து காணப்படுகின்றதுடன் இந்த இரும்பு துருப்பிடித்து சிதையும் அபாயொன்று காணப்பட்டது. இந்த இரும்பு பயன்படுத்துவதற்கு	மின்சார பிரிவினுள் Generator அறையொன்று அமைப்பதற்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்ட போதிலும் அப் பணி ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை மற்றும் அது கைதவிர்ப்பு குழுவிற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.	இந்த இரும்புகள் முடியுமான வரையில் விரைவாக பயன்பாட்டிற்கு எடுக்கப்படுவதற்கு அல்லது பயன்பாட்டிற்கு எடுக்க முடியாதெனில் கைதவிர்ப்பு செய்யப்படுவதற்

	அல்லது கைதவிர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.		கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(எ)	மீளாய்வாண்டினுள் ரூபா 101,214,000 ஆன தொகை மூலதன மானியமொன்றாக பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன், ஆண்டினுள் அத் தொகையில் செலவு செய்த தொகை ரூபா 37,747,483 ஆக காணப்பட்டது. ஆரம்ப மீதியும் உள்ளடங்கலாக எஞ்சிய ரூபா 63,505,607 ஆன பெறுமதி மீளாய்வாண்டு இறுதியில் மீண்டும் பொது திறைச்சேரிக்கு மாற்றப்பட்டிருந்தரூபா 26,898,606 மற்றும் ரூபா 36,607,000 மூன்று மாத காலம் மற்றும் இரண்டு அரை மாத காலம் வங்கி கணக்கில் விளைவற்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.	வைத்தியசாலையில் 50 கட்டணம் செலுத்தும் அறைகள் நிர்மாணிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டு அதற்காக பெறுகை நடைமுறையும் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், அதில் நிலவிய ஏதேனும் முழுமையற்ற தன்மை மற்றும் தாமதத்தினால் கருத்திட்டம் நிறைவேற்றுவதற்கு முடியாது போனது.	கருத்திட்டங்கள் முறையாக திட்டமிடப்பட்டு ஆரம்பிக்கப்பட ல் வேண்டும்.
(ஏ)	சபையிலுள்ள வைத்தியசாலை கட்டண பட்டியல்கள் மற்றும் இருப்பு தொடர்பாக (Systolic)கணினி அமைப்பின் தகவல்கள் கணக்கீட்டு அமைப்பிற்கு (Accpack) உள்ளீடு செய்யப்பட்டதன் பின்னர் நேருகின்ற வேறுபாடுகள் மீண்டும் கணக்கீட்டு அமைப்பினுள் நாளதுவரையாக்கப்படாமையின் காரணத்தினால் அமைப்பினுள் கொள்வனவு கிரயம், கடன் கொடுநர், கடன்பட்டோர் மற்றும் வைத்தியசாலை கட்டண வருமானம் போன்ற உறுப்படிகளின் பெறுமதிகள் வேறுப்படுவதுடன் ஒரே அமைப்பினுள் (Systolic) வெவ்வேறு திகதிகளில் மீதிகளில் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டமையினால் அவ் உறுப்படிகளின் சரியான பெறுமதிகள் நிதிக் கூற்றுக்களில் வெளிக்காட்டப்படுகின்றமை தொடர்பில் கணக்காய்வின் போது உறுதி செய்ய முடியவில்லை. சபையில் காணப்படுகின்ற கணினி அமைப்புக்கள் இடையே பரஸ்பர தொடர்பொன்று(System link)உருவாக்கியிராமை, கணினி அமைப்பில் தரவு உள்ளீடு செய்தல், பரீட்சித்தல் மற்றும் அங்கீகரிப்பதற்கு தொடர்புடைய நடைமுறைகள் முறையான அதிகாரமொன்றின் கீழ் செயற்படுத்தப்பட்டிராமை இதற்கு காரணங்களாயிருந்தது.	நிகழ்காலத்தில் Systolicஅமைப்பு மற்றும் கணக்கீட்டு(Acc Pack) அமைப்பின் வருமானம் அதாவது நாளாந்த காசாளர் அறிக்கைகள் (Cashier Session)மற்றும் கடன் கடிதங்கள் (Credit Letters) தானியங்கிமயமாக்கப்பட்டுள்ள துடன் எதிர்காலத்தில் பிரயோக ரீதியான சிக்கல்கள் தீர்க்கப்பட்ட பின்னர் முழுமையாக தானியங்கிமயமாக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.	கணினி அமைப்புகள் இரண்டு இடையேயும் சரியான தொடர்பொன்றி னை ஏற்படுத்த வேண்டும்.

3.3 மனிதவள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	இரு வகையான பதவிகளுக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பதவி எண்ணிகையை மிகைத்து 208 உத்தியோகத்தர்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட	பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் மற்றும் அமைச்சரின் ஆலோசனையின் அடிப்படையில் இவ்வாறு	அங்கீகரிக்கப்பட்டு ள்ள பதவி எண்ணிக்கையினுள் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளுதல்

	பதவியணியில் உள்ளடக்கப்படாத இரு வகையான பதவிகளுக்காக 140 உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர்.	நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது மற்றும் அப்போதிருந்த தலைவரின் நேரடி கட்டளையின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டது.	வேண்டும்.
(ஆ)	சபையில் நிலவுகின்ற பல்வேறு பதவிகளுக்காக புதிய ஆட்சேர்ப்பு நடைமுறையொன்று தயாரித்து முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் வைத்தியசாலையின் MN1சம்பள நிலையிலுள்ள 58 உத்தியோகத்தர்களுக்காக MN 2 சம்பள நிலைக்கு நியமிப்பதற்கு இலங்கை அபிவிருத்தி நிர்வாகநிறுவனத்தின் (SLIDA) ஊடாக ரூபா 865,905 தொகை செலவீனமொன்றினை ஏற்று பயிற்சியொன்று மற்றும் பரீட்சையொன்று நடத்தப்பட்டிருந்த போதிலும், MN2 சம்பள நிலையில் நியமிப்பதற்கு முடியாதிருந்தது.	MN1 இலிருந்து MN2 சம்பள நிலைகளுக்கு உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கு முடியாதுள்ளது.	ஆட்சேர்ப்பு நடைமுறை விரைவாக அங்கீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(இ)	மீளாய்வாண்டினுள் சபைக்கு ஆட்சேர்க்கப்பட்ட முகாமைத்துவ உதவியாளர்கள், ஓட்டுநர்கள் மற்றும் சுகாதார உதவியாள்களின் 149 பதவிகளுக்காக பொது விளம்பரம்இல்லாதுநேர்முக பரீட்சைக்கு அழைப்பு கடிதங்கள் வழங்கப்படல்,மற்றும் நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்ட திகதிகளில் சமூகமளித்தோரின் கையொப்ப பதிவுகள் இன்றி பேணிச் செல்லப்பட்டிருந்தது. பிரயோக ரீதியான பரீட்சையொன்று நடத்தப்படாது இணைத்துக் கொள்ளப்பட்ட 6 ஓட்டுநர்களுக்கு மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் மோட்டார் வாகன ஆய்வாளரொருவர் நியமிக்கப்படாது ஆட்சேர்க்கப்பட்ட பின்னர் பிரயோக பரீட்கையொன்று நடத்தப்பட்டிருந்தது.	நேர்முகப் பரீட்சைக்கு சமூகமளித்தவர்களின் கையொப்ப பதிவுகள் ஏதும் வைத்தியசாலையின் கோவையினுள் காணப்படவில்லை.	சரியான முறைமையின் பிரகாரம் ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
(ஈ)	2020 ஒக்தோபர் 26 திகதிய 02/2020 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை, 2024 யூலை 26 திகதிய 2394/56 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அதி விசேட வர்த்தமானி பத்திரிக்கையின் 2.3.1 மற்றும் 2.3.2 பிரிவு மற்றும் 2024 யூலை 26 திகதிய 05 ஆம் இலக்க தேர்தல் ஆனைக்குழுவின் சுற்றறிக்கைக்கு முரணாக, பொது திறைச்சேரியின் முன் அங்கீகாரமின்றி மேற்கொள்ளப்பட்டிருந்த ஆட்சேர்த்தல்கள், 2024 யூன் 28 திகதிய 483.12.2 ஆம் இலக்க பணிப்பாளர் சபை தீர்மானத்தின் ஊடாக இதுவரையில் வைத்தியசாலையின் சம்பளம் கொடுப்பனவிற்கு பயன்படுத்தப்பட்ட சம்பள அளவீடுகளிலிருந்து விலகி அரசாங்கத்திற்கு	அமைச்சரின் கட்டளை மற்றும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் இந்த விடயம் தொடர்பாக புதிய பணிப்பாளர் சபையின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டு அமைச்சரின் மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் கவனத்திற்கு மற்றும் ஆலோசனைக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு உள்ளடக்கப்படாத பதவிகளுக்கு ஆட்சேர்க்கப்படும் போது சம்பள நிலைகள் மாற்றப்படு போது பொது திறைச்சேரியின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படல் வேண்டுவதுடன் தொடர்புடைய சுற்றறிக்கைகளுக்கு

சொந்தமான முயற்சிகளுக்காக (SOE) வெளியிடப்பட்டிருந்த 2016 ஏப்ரல் 25 திகதிய 02/2016 ஆம் இலக்க அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சபைகள் மற்றும் அரசிற்கு சொந்தமான கம்பனிகளின் சம்பளங்கள் திருத்தத்தினை அடிப்படையாகக் கொண்டு 1996 யூலை 10 திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் 35 சதவீத கொடுப்பனவொன்று மருத்துவம் அற்ற பதவியணிக்கு செலுத்தப்பட்டமையினால் அப்போது சேவையிலிருந்த ஊழியர்களுக்கு மற்றும் புதிய ஊழியர்களுக்கு இடையே சம்பள ஏற்றத்தாழ்வு ஏற்பட்டடிருந்தது.		அமைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

3.4 வாகன முறைமை முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
பெறுமதி ரூபா 65,650,000 தொகையான 8 வாகனங்கள் சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	வாகனங்கள் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.	பயன்பட்டிற்கு எடுக்கப்படுகின்ற அவ் வாகனங்கள் சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

4. வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டிற்குரிய செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள 52 செயற்பாடுகளில் 29 செயற்பாடுகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. செயற்படுத்தப்பட்ட 23 செயற்பாடுகளில் 07 செயற்பாடுகளின் பௌதீக செயன்முன்னேற்றம் 25 அல்லது குறைவான மட்டத்தில் நிலவியது.	பதில் பெற்றுக் கொடுக்கப்பட்டிருக்கவில்லை.	செயல்நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.